புதியதோர் தலைமுறைக்கான நவீன சிந்தனை

ஒரு நிகழ்ச்சி நிரல்

மிலிந்த மொரகொட

நோக்கு

தொழில்நுட்பம் சார்ந்த 21 ஆம் நூற்றாண்டுக்கு எம்மை வழிநடாத்திச் செல்வதற்கு தேவைப்படும் அம்சமொன்றான முன்மாதிரி மாற்றத்தை ஏற்படுத்தும் பணியின் போது எமது சமூகத்தின் அனைத்து மட்டங்களிலும் துறைகளிலும் உள்ள பெரும்பாலான தலைவர்கள் காலத்துக்குப் பொருந்தாதவர்களாகவும் பேதுமான வசதிகளைக் கொண்டாராதவர்களாகவும் உள்ளனர் என்ற யதார்த்த நிலைக்கு ஒரு தேசம் என்ற வகையில் நாம் முகம் கொடுக்க வேண்டிய நிலையில் உள்ளோம். அத்துடன், நம்பிக்கையீனம் மற்றும் விரக்தியுணர்வு காரணமாக கடந்த காலங்களில் எமது நாட்டின் அதிசிறந்த, கீர்த்தி மிக்கவர்களுள் சிலர் நாட்டை விட்டுச் சென்றும் தொடர்ந்தும் சென்ற வண்ணமும் இருக்கிறார்கள். எமது சமூகத்தின் மத்தியல் காணப்படும் போக்குகளில் தீவிர மாற்றங்கள் ஏற்படாத வரையில் மேற்குறித்த நிலைமையில் எதுவித திருப்பமும் ஏற்படக்கூடிய வாய்ப்பில்லை எனக் கூறலாம். சுயநலம் மற்றும் குறுகிய மனப்பான்மையுடனான அரசியலும் அதனால் ஏற்படும் பிரதிபலன்கள் காரணமாகவும் இளைஞர்கள் முன்னெடுப்புகளை மேற்கொள்ளாதவர்களாகவும் அவர்களது வளர்ச்சி முடக்கிவிடப்பட்டவர்களாகவும் இருக்கின்றனர்.

இந்நிலைமைகளின் பின்னணியில் அவர்கள் நாட்டின் அபிவிருத்திக்கு காத்திரமான பங்களிப்பை வழங்க முடியாதவர்களாக உள்ளார்கள். எமது அரசியல் கலாசாரத்தில் ஐந்து தசாப்தங்களாக வேரூண்டியுள்ள கசப்புணர்வும் வெறுப்புணர்வும் முடிவுக்குக் கொண்டுவரப்படல் வேண்டும். இலங்கையர் என்ற அடையாளத்தை பிரதிபலிக்கும் விதத்திலான சகலரையும் உள்வாங்கும் தேசிய செயற்திட்டமொன்று திட்டமிடப்படல் வேண்டும்.தேசிய நோக்கினை பகிர்ந்து கொள்ளும். அத்துடன் பலமானதோர்

பொதுச்சேவை ஒழுக்க முறையை பின்பற்றக் கூடிய அரசியல், வர்த்தக, ஊடக, சிவில் சமூக தலைவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் புதியதோர் தலைமுறையை வளர்த்து போஷிக்கப்பட வேண்டும். சட்டத்தின் ஆட்சி அதிமேலோங்கியதாக அமைந்துள்ள ஒழுக்கமானதோர் சமூகம் உருவாக்கப்பட வேண்டும்.

தற்போதைய நல்லிணக்க வழிமுறையானது சிறந்த முறையில் அமையப் பெறாமல் சகலரையும் உள்வாங்காத விதத்தில் அமைந்துள்ளதுள்ளதன் காரணமாக தேசிய மட்டத்தில் அதன் சட்டபூர்வத்தன்மை குறைந்துள்ளது. இந்நிலையில் நீண்ட காலமாக கவனமெடுக்கப்படாத அநீதிகள் மோசமடைந்து, இனத்துவ, வர்க்கபேத மற்றும் சமய ரீதியிலான பிரிவினைகள் அதிகரித்துள்ளன. இலங்கையிலுள்ள உணர்வுபூர்வமான சிக்கலான சமூக யதார்த்தங்களை புரிந்துக் கொள்ளாமல் கடந்த காலத்தின் மனவடுக்களை மீண்டும் நினைவூட்டுவதானது வெறுப்புணர்வை மேலும் அதிகரிக்கச் செய்து பிரிவினையையும் தொடரச்செய்யும். இதனூடாக வரலாறு எடுத்துக் கூறியுள்ளவாறு பயங்கரமான பின்விளைவுகளுக்கு எம்மை இட்டுச் செல்லும்.

எமது சமூகமானது இனத்துவ, சமய, ரீதியில், வர்க்க ரீதியில், மொழி ரீதியிலும், புவியியல் மற்றும் அரசியல் ரீதியிலும் பிளவுப்பட்டுள்ளது. சுதந்திரத்துக்குப் பிந்திய காலத்தில் எம்மை அச்சுறுத்திய அத்துடன் எமக்குப் புரிந்து கொள்ள முடியாத வன்செயல்களுக்கான மூலகாரணமாக முன்கூறப்பட்ட ஆழமாக வேறூண்றியுள்ள தவறுகளை முன்வைக்கலாம்.

இந்த பிரச்சினையை எதிர்கொள்வதற்காக வேண்டி சகலரையு உள்வாங்கிய, எம்மத்தியிலிருந்து உருவாக்கம் பெறும் அரசியல் கலப்பற்றதோர் நல்லிணக்க வழிமுறை முன்னெடுக்கப்படல் வேண்டும்.

தற்போதைய சூழ்நிலையில், ஒரு பலமிக்க தேசிய அடையாள கட்டமைப்புக்குள் வரும் விதத்திலான அறிவுத்தெளிவுபெற்ற வெளிப்படையான அபிவிருத்தி வியூகமொன்றை பின்பற்றக் கூடியவாறான அரிய சந்தர்ப்பமொன்று இலங்கைக்கு கிடைத்துள்ளது. இதற்கான அடிப்படை அம்சங்களை சரியாகப் புரிந்து கொண்டு உரிய முன்னெடுப்புக்கள

மேற்கொள்வதற்காக வேண்டி நாம் எமது அரச மற்றும் அரசியல் கட்டமைப்புக்களையும் பொருளாதார அபிவிருத்தி வியூகங்களையும் சமூக கொள்கைகளையும் மீள்மதிப்பீடு செய்ய வேண்டிய தருணம் உருவாகியுள்ளது. சுதந்திரம் கிடைக்கப் பெற்று ஏறத்தாழ 70 ஆண்டுகள் பிந்திய நிலையிலும் அதேபோன்று எமது சமூகத்தை அதிர்ச்சிக்குள்ளாக்கிய 30 வருட யுத்தத்திற்கு பிந்திய சூழ்நிலையிலும் எம்மத்தியில் அதிகரித்த வண்ணம் காணப்படும் நிச்சயமற்ற உலகின் சவால்களை எதிர்கொள்வதற்காக வேண்டி எமது வேறுபாடுகளை களைவதென்பது மிகவும் தீர்க்கமானதாக அமைந்துள்ளது.

பெறுமானங்களும் சமூகமும்

எமது சமூகத்தின் முக்கியமான பங்கொன்றினை ஆன்மீகத் தலைவர்கள் வகிக்கிறார்கள் என்பதனை நாம் ஏற்றுக்கொள்ளல் வேண்டும். மிகவும் கண்டிப்பான தர நிர்ணயங்களையும் வெளிப்படையான சட்டவிதிகளையம் கொண்டதோர் அரச – தனியார் இணைந்த கல்விமுறைமையொன்று எல்லா மட்டங்களிலும் உருவாக்கப்படல் வேண்டும்.
அரச உத்தரவாதம் பெற்ற கடன் உதவித் திட்டங்கள் சகல மாணவர்களுக்கும் எளிதாக கிடைக்கும் விதத்தில் முன்னெடுக்கப்படுதல் வேண்டும்.
அதேபோன்று, அரச, தனியார் கூட்டுச் சேர்ந்த சுகாதார முறைமையொன்றும் கண்டிப்பான ஒழுங்குபடுத்தல் தரங்களுக்கும், நோயாளர் – பாதுகாப்பு தரங்களுக்கும் உட்பட்டவாறு அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்மேலும் . ஒரு குறிப்பிட்ட மக்கள் குழுவை அடிப்படையாகக் கொண்டவாறு செயல்படும் அரச சுகாதார காப்புறுதி செயற்திட்டமொன்று அமைக்கப்படல் வேண்டும்.
முதிய நிலையை அடையும் மத்தியதர வருமானத்தைக் கொண்ட சமூகத்தினரின் தேவைகளை நிவர்த்திக்கும் பொருட்டு அனைத்து சமூக சேவைத் திட்டங்களும் தீவிரமான மீள்கட்டமைப்புக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
வரட்சி மற்றும் வெள்ள அபாய நிலைமை உள்ளிட்ட சுற்றாடல், காலநிலை சார்பு விடயங்களுடன் தொடர்புபட்ட பிரச்சினைகள் மீது அனைவரையும் உள்வாங்கும் விதத்திலான தேசிய மட்ட கலந்துரையாடல்கள் ஊக்குவிக்கப்படல் வேண்டும். அதேபோன்று இவ்வாறான சவால்களுக்கு

முகம்கொடுக்கும் விதத்திலான அவசர நடவடிக்கைகள் எதிர்வினை அடிப்படையிலன்றி உயிர்ப்பான விதத்தில் அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்அதேபோன்று ., எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும் சகல அபிவிருத்தி செயற்திட்டங்களும் பசுமையான, சுற்றாடல் சார்பு அம்சங்களுக்கு உட்பட்டவாறு அமைதல் வேண்டும்.

கொள்கையளவில் அரசாங்கம் நாடளாவிய ரீதியில் விளையாட்டு மற்றும் ஓய்வுநேர செயற்பாடுகளை முன்னெடுக்கும் கடப்பாட்டில் உள்ளதுடன் இதனூடாக மக்கள் நலனும் சமூக ஒன்றுதிரட்டலும் ஊக்குவிக்கப்படல் வேண்டும்அதேபோன்று . விளையாட்டு கழகங்களின் பதவிகளில் தற்போது சேவைபுரியும் அரசியல்வாதிகளோ அரச உத்தியோகத்தர்களோ கடமையாற்றும் நிலை தவிர்க்கப்படல் வேண்டும்நாட்டிலுள்ள . விளையாட்டுக் கழகங்களினதும் அமைப்புகளினதும் செயற்பாடுகள சுதந்திரமான முறையில் ஒழுங்குபடுத்துவதற்காக வேண்டி, தகுதிவாய்ந்த துறைசார் நிபுணர்கள் அடங்கிய தேசிய விளையாட்டு அதிகார சபையொன்று நிறுவப்படல் வேண்டும்.

அரசாங்கமும் ஆட்சி அமைப்பும்

சட்ட வாக்கங்கள் ஊடாக அரசியல் கட்சி சார்பான சீர்திருத்தங்கள் முன்னெடுக்கப்படல் வேண்டும்இவற்றுள் ., கட்சிக்குள் ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதற்கான ஏற்பாடுகள், நிதி சார்பு வெளிப்படைத் தன்மை, கட்டாய செலவுகள் மற்றும் அரசியல் கட்சிகள் வழங்கும் தேர்தல் வாக்குறுதிகள் மீதான பொறுப்புக்கூறல் போன்றவை உள்ளடக்கப்படல் வேண்டும்கட்சிக்குள் ஜனநாயகத்தை . பலப்படுத்தியவாறும், பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தியவாறும் செயற்படும் பட்சத்தில், பாராளுமன்றத்திலும், உள்ளூராட்சி சபைகளிலும் கட்சித் தாவல்கள் இடம்பெறுவதை தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடிய வாய்ப்பும் ஏற்பட்டுவிடும்.

நாட்டில் வாழும் சகல பிரஜைகளும் ஜனாதிபதியை தெரிவு செய்யும் பணியில் பங்காளர்களாக அமைவதால் அவர்களால் நேரடியாக தெரிவுசெய்யப்படும் ஜனாதிபதி முறை இங்கு மிக முக்கியமானதாக அமைகின்றது.

குறித்த ஜனாதிபதி பாராளுமன்றத்துக்கு பொறுப்புக் கூறுபவராக இருக்க வேண்டியதுடன் அவர் தெளிவாக குறித்தொதுக்கப்பட்ட அதிகாரங்களையும் கொண்டிருத்தல் வேண்டும்சமயங்களுக்கிடையிலும்) தேசிய நல்லிணக்கம் ., இனங்களுக்கிடையிலும்(, தேசிய பாதுகாப்பு, பொருளாதார ஸ்திரத்தன்மை, சமூக சமத்துவம் மற்றும் சமச்சீரான பொருளாதாரத்தை பேணிவருதல் போன்ற விடயங்கள் தொடர்பில் எழும் பிரச்சினைகள் மீது தலையிடக்கூடிய அதிகாரங்களும் இவற்றுள் அடங்குதல் வேண்டும்.

அதேபோன்று அரச சேவையின் சீரான அமைப்பை பாதுகாக்கும் பணிகள், அரசினால் மேற்கொள்ளப்படும் அதிகாரத் துஷ்பிரயோகங்களை தடுத்துநிறுத்தும் பணிகள் போன்றவை தொடர்பான அதிகாரங்களையம் ஜனாதிபதி கொண்டிருப்பார்.

ஒரு ஜனாதிபதியுடன் சேர்ந்து இரண்டு உப ஜனாதிபதிகள் இருக்க வேண்டியதுடன் இவர்கள் முழுமையானதோர் தேசிய நல்லிணக்க வழிமுறைக்கு கூட்டுத் தலைமைத்துவம் வழங்க வேண்டிய பொறுப்பினையும் கொண்டிருப்பர்.

ஜனாதிபதி வேட்பாளர்கள் இரு உப ஜனாதிபதி வேட்பாளர்களுடன் ஒரு பட்டியலின் கீழ் போட்டியிடுவர்இவர்கள் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் ., குறித்த ஜனாதிபதியும் இரு உப ஜனாதிபதிகளும் அரசியல் கட்சிகளின் அங்கத்துவத்திலிருந்து விலகியவர்களாக கருதப்படுவர்.

ஜனாதிபதி, உப ஜனாதிபதிகள், பிரதம மந்திரி மற்றும் அமைச்சர்கள் என்போருக்குரிய புதிதாக விபரிக்கப்பட்டுள்ளவாறான குறித்த பணிகள் மற்றும் பொறுப்புக்கள் என்பன அரசியல் யாப்பில் உள்ளடக்கப்படல் வேண்டும். அமைச்சரவையில் அமைச்சர்களின் எண்ணிக்கை 30 ஆகவும் அதற்குச் சமமான எண்ணிக்கைகளைக் கொண்ட பிரதி அமைச்சர்களுக்கும் மட்டுப்படுத்தப்படும். அதேவேளை ஜனாதிபதியும், உப ஜனாதிபதிகளும் அமைச்சரவையின் எதுவித அமைச்சுப் பதவியையும் பொறுப்பேற்கமாட்டார்கள்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் விகிதாசார மற்றும் தொகுதிவாரி அடிப்படையிலான கலப்பு முறையின் கீழ் தெரிவு செய்யப்படுவர் . எவ்வாறாயினும் ஒரு ஸ்திரமான அரசாங்கத்தை உறுதிப்படுத்தும் நோக்கில்

அதற்குத் தேவைப்படும் ஏற்பாடுகள் உள்ளடக்கப்படல் வேண்டும்மேலும் .
திடீரென ஏற்படும் தொகுதிவாரி அங்கத்தவர் சார்பு வெற்றிடங்களை பூர்த்து செய்யும் பொருட்டு இடைத் தேர்தல் பொறிமுறையொன்று நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டும்.
இனத்துவ, சமய ரீதியிலான மற்றும் பிராந்திய ரீதியிலான சமத்துவம் போன்ற விடயங்களில் ஏற்படும் பெரும்பான்மை ஆதிக்கத்துக்கு எதிரான சக்திவாய்ந்த சமச்சீர் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் நிறுவனமொன்றாக செனட் சபையொன்று பொதுமக்களால் நேரடியாக தெரிவு செய்யப்பட்டு நிறுவப்படல் வேண்டும்.
21 ஆம் நூற்றாண்டின் சவால்களை எதிர்கொள்வதற்காக வேண்டி அரச அதிகாரிகள் மத்தியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பிரமுகர் குழாமொன்று பயிற்றுவிக்கப்பட்டு பராமரிக்கப்படல் வேண்டும்திகமாகஇதற்கு மேல .,
அனுபவம் வாய்ந்த வல்லுனர்களையும் விசேட நிபுணர்களையும் உள்ளடக்கியதோர் கொள்கை சார்பு ஆலோசனைக் கவுன்சில் நிறுவப்பட்டு அதனூடாக அமைச்சரவையில் தீர்மானம் எடுக்கும் வழிமுறையில் உரிய ஆலோசனைகளை வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்படல் வேண்டும்.
வருடாந்தம் 250 பில்லியன் ரூபா செலவாகும் மாகாண சபைகள் செயற்றிறனற்றதோர் முறைமையொன்றாகும்என்பதுடன் இவை .
.ஒழிக்கப்படல் வேண்டும் எவ்வாறாயினும், உள்ளூராட்சி நிறுவனங்களின், அதாவது மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகள் போன்றவற்றின் அதிகாரங்கள் மற்றும் விடயப் பரப்புகள் போன்றவை அதிகரிக்கப்படல் வேண்டும்தேவைப்படும் பட்சத்தில் இவை மேலும் . உருவாக்கப்படலாம் .
அதிகாரம் வழங்கப்பட்ட உள்ளூராட்சி அதிகார சபைகள் ஊடான நிதிப் பன்முகப்படுத்தல் வழிமுறை காரணமாக வருடாந்த வரவு செலவுத் திட்ட வளங்களிலிருந்து அதிகரித்த நிதி வசதிகள் கிடைப்பதுடன், அவற்றைப் பயன்படுத்தி பாரிய அளவிலான சனசமூக அபிவிருத்தி நடவடிக்கைகளையும் அரச முதலீட்டு நிகழ்ச்சித் திட்டங்களையும் முன்னெடுக்க முடியும்.
மத்திய அரசாங்கமானது சேவை வழங்கல் மற்றும் மாவட்ட மட்ட நிர்வாக பொறிமுறை ஊடான வளங்கள் விநியோக நடவடிக்கைகள் போன்ற செயற்பாடுகள் உறுதிசெய்யும் .

அரச சேவை வழங்கலின் போதும் பெறுகை செயற்பாடுகளிலும் அதிகூடிய அளவிலான நவீன தொழில் நுட்பத்தினை பயன்படுத்தல் வேண்டும் என்பதுடன் இவ்வாறான வழிமுறைகள் ஊடாக வெளிப்படைத் தன்மை உறுதிப்படுத்தப்பட்டு, இடைத்தலையீடுகள் அகற்றப்பட்டுஊழல்களுக்கான .
கள் குறைக்கப்பசந்தர்ப்பங்டும்.
காலம் கடந்த அனைத்து சட்டங்களும் பிரமாணங்களும் நீக்கப்படல் வேண்டும் என்பதுடன் பழைய அரச திணைக்களங்கள் மூடப்படல் வேண்டும்.
பொதுமகக்ளுக்கு முன்னேற்றமடைந்த விதத்திலானதோர் சேவை வழங்கலை நோக்கமாகக் கொண்ட நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு அங்கமாகவே மேற்குறித்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளனமேலும் புதிய .
சட்டவிதியொன்று அறிமுகம் செய்து வைக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பழைய, நடைமுறையில் உள்ள சட்டவிதியொன்றை கண்டறிந்து நீக்குவதற்கு அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
அனைத்து சுயாதீன ஆணைக்குழுக்களினதும் அடைவு மட்டங்கள் உள்ளிட்ட பணிகள் யாவும் அவற்றின் செயற்றிறன் அடிப்படையில் மீள் பரிசீலனைக்கும் மீளாய்வுக்கும் உட்படுத்தப்படும்தேவைப்படும் பட்சத்தில் தற்போதுள்ள நிரல் .
நிறுவனங்களுக்குப் பதிலாக மேலதிக கட்டமைப்புகளை உருவாக்காமல் அவை (பயன்பாட்டில் உள்ளவை.வலுவூட்டப்படும் (
பல்கலைக்கழக கட்டமைப்புக்குள் வரும் அனைத்து பல்கலைக்கழகங்களிலும் அரசியல் நடவடிக்கைகளை தடைசெய்யும் பொருட்டு சட்டங்கள் நிறைவேற்றப்படும்.
பொருளாதாரம்
அரசாங்கம் சகலவித வர்த்தக நடவடிக்கைகளிலிருந்தும் ஒதுங்கியவாறு செயற்படும்சர்வதேச ரீ .தியிலான அதிசிறந்த முறைமைகளை அனுசரித்தவாறு, இலங்கை அதன் பயன்பாட்டு மற்றும் உட்கட்டமைப்பு, துறைகளை தனியார் முதலீடுகளுக்கு திறந்துவிடப்படல் வேண்டும்வர்த்தக .
ரீதியிலான சொத்துக்கள் மீதான அரச உரிமையானதும் சட்டவிதிகள் மற்றும் ஒழுங்குபடுத்தல் கட்டமைப்புக்களைக் கொண்டு மாற்றப்படல் வேண்டும் .
தனியார் முதலீடுகளுக்கும் வர்த்தக நடவடிக்கைகளுக்கும் பாதிப்பாக

அமையும் அம்சங்கள் யாவும் அவசர தேவையின் அடப்படையில் கண்டறியப்பட்டு நீக்கப்படல் வேண்டும்.

தேசிய வரவு செலவுத் திட்டத்தை சமச்சீர் செய்வதற்காக வேண்டி அரசாங்கம் நிதிப் பொறுப்பு சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்படல் வேண்டும். குறித்த வரவு செலவுத் திட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் பட்சத்தில், ஏதேனும் புது அரச செலவினங்களுக்கான முன்மொழிவுகள் என்பன செலவினக் குறைப்புகளை மேற்கொள்வதன் மூலம் நிவர்த்திக்கப்படல் வேண்டும். எனினும் தேசிய ரீதியிலான அவசரத் தேவைகளின் போது இவ்வாறு அமையலாகாது.

வலுவாக்கம் பெற்ற அத்துடன் பொறுப்புக் கூறல் அடங்கிய நாணயச் சபையொனறுடன் இணைந்து சுயாதீனமாக இயங்கும் விதத்தில் மத்திய வங்கி உருவாக்கப்படல் வேண்டும் மேலும் ஒற்றை இலக்கத்துடனான . குறைந்த பணவீக்கத்தையும், சந்தைமைய செலாவணி வீதத்தையும் பேணி - வருவதை உறுதிப்படுத்துவதே மத்திய அரசாங்கத்தின் வகிபாகமாகும் . அதேபோன்று நிதி முறைமையின் ஸ்திரத்தன்மையை பேணி வருவதும் சுயாதீன மத்திய வங்கியின் பொறுப்பொன்றாகும்.

மேலும் தொழில் முயற்சிகள், புத்தாக்கம் மற்றும் போட்டித் தன்மை தொடர்பான அமைச்சொன்றை தலைமை தாங்கும் பிரதான பொறுப்பை பிரதம மந்திரி கொண்டுள்ளார்பொருளாதாரத்தை நவீனமயப்படுத்துவதற்கு . தேவையான கொள்கைகளை வடிவமைத்தல்பொருளாதார வளர்ச்சியையும் . தொழில் வாய்ப்புக்களையும் உருவாக்குதல் மற்றும் இலங்கையை உலகளாவிய சந்தை அமைப்பில் ஒருங்கிணைத்தல் போன்ற விடயங்களை துரிதமாக நிறைவேற்றுவதை உறுதிப்படுத்துவதற்கான விரிவான அதிகாரங்களை இவ்வமைச்சு கொண்டருக்கும்மேலும் இலங்கையின் . கேந்திர அமைப்பு, மனிதவளம், அழகான இயற்கை காட்சிகள், கலாசாரப் பின்னணி மற்றும் இயற்கை வளங்கள் போன்றவை சுற்றுலாத்துறை, முக்கிய உற்பத்தித் துறை, தகவல் மற்றும் தொடர்பாடல், பொருட்கள் போக்குவரத்து போன்ற துறைகளில் இலங்கை பொருளாதார ரீதியாக நன்மைகளைப் பெறக்கூடிய சிறந்த நிலையில் இருக்கின்றதுஇவ்வாறான . உள்ளார்ந்த வளங்களைக் கொண்டு பயன்பெற வேண்டுமாயின்

அதற்குவிடாமுயற்சியுடனான இயக்கப்பாடும் தேசிய மட்ட கவனமுமே தேவைப்படுகின்றன.

நடைமுறையிலுள்ள காணிக் கொள்கைகள் மீள் உருவாக்கப்படல் வேண்டும் என்பதுடன் அதில் நன்கு திட்டமிடப்பட்ட இலங்கையர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட விதத்திலான காணிப்பாவனை முறைமை, மற்றும் விவசாய அபிவிருத்தியுடன் தொடர்பான சட்டவிதிகள் போன்றவை தீவிர சீர்திருத்தத்துக்கு உட்படுத்தப்படல் வேண்டும்அதேவேளை ., நகரப் பிரதேசங்களுக்கு வெளியே வாழும் ஒவ்வொரு பிரஜையும் குடியிருப்புக்காக வேண்டி காணித்துண்டொன்றை பெற்றுக்கொள்வதை அரசாங்கம் உறுதி செய்தல் வேண்டும்.

இலங்கையின் விவசாய உற்பத்திப் பொருட்களுக்கும் பழங்கள்), காய்கறிகள், தானியங்கள்(, மீன் வளர்ப்பு மீன்பிடித்துறை), மீன் பண்ணை( மற்றும் விலங்கு வேளாண்மை கோழி வளர்ப்பு), பால் பண்ணைபோன்றவற்றுக்கும் ( பொருத்தமானதோர் அறிவுபூர்வமான ஏற்றுமதியைஉள்ளூர் சந்தையை / மையப்படுத்திய வியூகமொன்றை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக இந்நாட்டின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்ய முடியும்இவ்வாறான . கொள்கைகள் ஊடாக கிராமப்புற, விவசாய மைய, சிறு முயற்சியாளர் சார்பான பொருளாதாரம் நன்கு நிறுவனமயப்படுத்தப்பட்ட உற்பத்தி வழிமுறைகளுடனும் விநியோகத் துறைகளுடனும் மிகவும் நியாயமான நிபந்தனைகளின் அடிப்படையில் ஒருங்கிணைக்கப்படுவதை உறுதிப்படுத்தும்.

நாம் சுதந்திரம் பெற்றதிலிருந்தே தேக்க நிலையிலுள்ள தோட்டக் கைத்தொழில் பொருளாதாரம் நவீனமயமாக்கப்படல் வேண்டும்ஏற்றுமதிப் . பொருட்கள் சார்ந்த விவசாயத்தை இங்கு பல்வகைப்படுத்த முடியுமா என்பதனை கண்டறிதல் வேண்டும் என்பதுடன பெறுமதி சேர்க்கப்பட்ட விவசாய உற்பத்திப் பொருட்கள் தொடர்பில் இங்கு கூடிய கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

நாடளாவிய ரீதியிலான, உற்பத்தியை அதிகரிக்கும், சர்வதேச ரீதியில் போட்டித் தன்மை வாய்ந்த மனிதவள மையமொன்று உருவாக்கப்படல் வேண்டும்இதற்காக . வேண்டி, இலங்கையில் நடைமுறையிலுள்ள தொழிலாளர் சட்டங்கள் மற்றும் பிரமாணங்கள் போன்றவை உலகளாவிய

ரீதியில் மிகவும் போட்டுத் தன்மை வாய்ந்த பொருளாதாரங்களுடன் ஒப்பீட்டளவில் இசைவாக்கம் பெறக்கூடியனவாக இருத்தல் வேண்டும். இதனை அடைவதற்கு தற்போதுள்ள சட்டங்கள், பிரமாணங்கள் மற்றும் செயற்பாடுகளில் தீவிர மாற்றங்கள் தேவைப்படுகின்றன.

இலங்கையின் சக்தித் துறையை தூய்மையான அத்துடன் மாற்று சக்தியால் இயங்கும் வலையமைப்பொன்றாக மாற்றியமைப்பதற்குத் தேவையான துரித, கால அட்டவணையுடன் சேர்ந்த நிகழ்ச்சித் திட்டமொன்று செயற்படுத்தப்படும். அதேபோன்று அதிவேக மின் சக்தியால் இயங்கும் தேசிய ரெயில் சேவையொன்றும் பாரிய போக்குவரத்து முறைமையொன்றும் துரித, கால அட்டவணையுடன் சேர்ந்த முதலீட்டுத் திட்டமொன்றாக திட்டமிடப்படல் வேண்டும்தற்போது . வாகனங்களால் பயன்படுத்தப்படும் டீசல் மற்றும் பெட்ரோல் போன்றவற்றிலிருந்து மாற்றுச் சக்திக்கு படிப்படியாக மாறுவதற்கான காலக்கெடுவொன்று அறிவிக்கப்படல் வேண்டும்அவ்வாறான . மாற்றத்துக்குத் தேவைப்படும் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படல் வேண்டும்அதேபோன்று சாரதியற்ற . வாகனங்கள் தொடர்பாகவும் இவ்வாறான வசதிகள் ஏற்படுத்தப்படல் வேண்டும்.

நாட்டில் வாழும் மத்திய தர வகுப்பினரின் அபிலாஷைகளையும் தேவைகளையும் பூர்த்தி செய்யும் விதத்தில் இலங்கையின் பொதுப் போக்குவரத்துச் சேவை தீவிர சீர்திருத்தங்களுக்கு உட்பட்டவாறு நவீனமயப்படுத்தப்படல் வேண்டும்இதனை . அரச, தனியார் கூட்டு முயற்சிகள (PPPs) ஊடாக மிகவும் வெற்றிகரமாக முன்னெடுக்க முடியுமென்பதை சிறந்த சர்வதேச ரீதியான நடைமுறைச் செயற்பாடுகளிலிருந்து தெரியவந்துள்ளது.